MCOP.NO. 790 / 2015 Name: ஜனார்த்தனன் கிரிடி PW: 1 04.10.2018.

*ம.சா. 1 இன்று ( 04.10.2018 ) குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.*

**குறுக்கு விசாரணை:—( 1—ம் எதிர்மனுதாரர் தரப்பில் )**

எனக்கு சொந்த ஊர் திருச்சி கொட்டப்பட்டு. மனுவில் நான் துறைமங்கலம் பெரம்பலூாில் வசிப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்பது சாி. எனக்கு பெரம்பலூர் பஸ் ஸ்டாப் அருகில் உறவினர்கள் உள்ளார்கள். நான் மேற்படி பெரம்பலூர் விலாசத்தை தொிவிக்கும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்பது சாி. விபத்து நடந்தது முதல் தற்பொழுது வரை நான் திருச்சி கொட்டப்பட்டுவில் தான் வசிக்கின்றேன் என்பது சாி. திருச்சி நீதிமன்றம் எனக்கு பெரம்பலூர் நீதிமன்றத்தை விட அருகில் உள்ளது என்பது சாி. நான் பணிபுாிந்த இடம் திருச்சி தில்லைநகர் என்பது சாி. திருச்சி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யாமல், பெரம்பலூர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு என்ன காரணம் என்று என் மனுவிலும், என் பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு கூறவில்லை என்பது சாி. நான் இந்த வழக்கை 2015 ஆம் ஆண்டு தாக்கல் செய்தேன் என்பது சாி. இந்த சம்பவத்தில் என்னுடன் காயமடைந்த மற்ற மூன்று நபர்கள் திருச்சி நீதிமன்றத்தில் 2014 ஆம் ஆண்டில் கிளைம் மனு தாக்கல் செய்தார்கள் என்பது சாி. என் நண்பர் சசிகுமார் மேற்படி விபத்தில் காயமடைந்து அவரும் திருச்சி நீதிமன்றத்தில் கிளைம் மனு தாக்கல் செய்துள்ளார் என்பது சாி. நான் திருச்சியில் 17 வருடங்களாக இருக்கின்றேன். திருச்சி நீதிமன்றம் மற்றும் திருச்சி நகரம் பற்றி எனக்கு தொியும் என்பது சாி. என் வண்டி சம்மந்தப்பட்ட இன்சூரன்ஸ் கம்பெனி உறையூாில் உள்ளது. திருச்சி முத்தரையர் சிலை, யுனைடெட் இன்டியா அலுவலகம், நீதிமன்றம், உறையூர் வழியாக என் இன்சூரன்ஸ் கம்பெனிக்கு போகலாம் என்றால் அவ்வாறும் போகலாம். திருச்சியில் யுனைடெட் இன்டியா இன்சூரன்ஸ் கம்பெனி அலுவலகம் உள்ளது என்பது எனக்கு தொியும். திருச்சி நீதிமன்றத்தில் அந்த மூன்று பேர் நஷ்டஈடு கோாி மனு தாக்கல் செய்த பிறகே நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்பது சாி. திருச்சி நீதிமன்ற வழக்குகள் தொடர்பாக எனக்கு நீதிமன்றத்தில் இருந்து எனக்கு சம்மன் வந்தது என்பது சாி. அந்த வழக்குகளில் நான் ஆஜராகி பதில் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், அந்த வழக்குகளில் நான் என் மீது தவறு உள்ளதால் ஆஜராகாமல் விட்டு விட்டு என் மீது எக்ஸ்பார்ட்டி உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் தவறு. சசிகுமார் திருச்சி

நீதிமன்றத்தில் என் மீது மனு தாக்கல் செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் எனக்கு அது தெரியவில்லை. நான் வழக்கறிஞர் வைத்து அந்த வழக்கை நடத்தி வருகின்றேன். திருச்சி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தால் இந்த வழக்கு விபத்திற்கு நான் தான் காரணம் என்ற விபரம் தெரியவந்து விடும் என்பதால் பொய்யான விலாசம் கொடுத்து இந்நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. இந்த மனு இந்த நீதிமன்ற ஆள்வரை எல்லைக்குள் இல்லை என்பதால் இம்மனு தள்ளுபடியாக வேண்டும் என்றால் தவறு. நான் மருத்துவமனையில் 04.07.2014 அன்று சேர்ந்து 19.07.2014 அன்று டிஸ்சார்ஜ் ஆனேன் என்பது சரி. டிஸ்சார்ஜ் ஆனபிறகு நான்கு நாட்கள் கழித்து நான் மீண்டும் அதே மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். நான் அப்பொழுது மருத்துவமனைக்கு ஆட்டோவில் போனேன். கீதாஞ்சலி மருத்துவமனைக்கு போவதற்கு விபத்து பரிவு காவல் நிலையத்தை தாண்டி செல்ல வேண்டும் என்பது சரி. 07.08.2014 அன்று நான் மீண்டும் அதே மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன் என்பது சரி. அப்பொழுது என்னுடன் மருத்துவமனைக்கு என் அப்பாவும் வந்தார். போக்குவரத்து தெற்கு பிரிவு காவல் நிலையத்திற்கு மருத்துவமனைக்கு சென்று விட்டு வரும் பொழுது சென்றேன். அந்த தேதி எனக்கு நினைவில்லை. விபத்து ஏற்பட்டவுடன் காவல் நிலையத்திற்கு உடனடியாக புகார் கொடுக்க வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும் என்பது சரி. என்னால் உடல் நிலை சரியில்லை என்பதாலும், பணம் இல்லை என்பதாலும் காவல் நிலையம் செல்ல இயலவில்லை என்று சாட்சி கூறுகின்றார். மருத்துவமனையில் இருந்து நான் டிஸ்சார்ஜ் ஆனபிறகு போலீசார் வந்து என்னை விசாரித்தார்கள். போலீசார் வழக்கு பதிவு செய்த விபரம் மருத்துவமனையில் இருந்த பொழுதே எனக்கும், என் அப்பாவிற்கும் தெரியும் என்பது சரி. நான் மருத்துவமனையில் இருந்த பொழுது தான் என் வண்டியை என் அப்பா காவல் நிலையத்தில் ஒப்படைத்தார் என்றால் எனக்கு அது தெரியாது. ஜெயராஜ் என் அப்பாவிற்கு நீண்ட நாள் நண்பர். காவல் நிலையத்திற்கு சென்ற பொழுது என்னுடன் ஜெயராஜீம் உடன் வந்தார் என்பது சரி. காவல் நிலையத்தில் என்னை யாரேனும் வற்புறுத்தி மிரட்டினார்களா என்றால் நான் காவல் நிலையத்திற்குள்ளேயே போகவே இல்லை, என் அப்பா தான் உள்ளே போனார். என் வண்டியின் பதிவுச்சான்று, என் ஓட்டுநர் உரிமம், காப்பீட்டு சான்று ஆகியவற்றை போலீசாரிடம் என் அப்பா

தான் கொடுத்தார். விபத்து நடைபெற்ற பிறகு அந்த தேதி வரை என் அப்பா காவல் நிலையம் சென்று வந்தாரா என்பது எனக்கு தெரியாது. நான் டிஸ்சார்ஜ் ஆனபொழுதே எனக்கு நினைவு வந்து விட்டது என்பது சரி. நான் பிகாம் படித்துள்ளேன். நான் எப் பொழுதும் படித்து பார்த்து விட்டு தான் கையெழுத்து போடுவேன் என்பது சரி. ஆனால் அன்று நான் படித்து பார்க்காமல் கையெழுத்து போட்டேன். நான் விபத்திற்கு பிறகு இரண்டு மாதம் கழித்து தான் பூரண சுயநினைவு பெற்றேன். காவல் நிலையத்தில் என்னை கைது செய்தார்கள் என்பதும், ஜெயராஜ் என்னை வெளியில் விடுவதற்கு ஜாமீன்தாரராக கையெழுத்து போட்டார் என்பது சரி. அப்பொழுதும் அங்கேயே நான் என் மீது பொய் வழக்கு கொடுக்கப்பட்டுள்ளதாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் நான் அங்கேயே ஒரு புகாரை எழுதிக்கொடுத்தேன். ஆனால் அந்த புகாரை போலீசார் வாங்கவில்லை. அந்த புகாரை எழுதிக்கொடுத்த பொழுது நான் நினைவுடன் தான் இருந்தேன் என்பது சரி. புகாரை போலீசார் வாங்க மறுத்து விட்டதால் அன்றே உயர் அதிகாரிகளிடம் மனு கொடுத்தேன். அதற்கு மனு ரசீது வழங்கப்பட்டது என்பது சரி. காவல் உயர் அதிகாரிகளிடம் புகார் கொடுத்ததாக கூறுவது பொறுத்து நான் இந்நீதிமன்றத்தில் ஆதரவு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்பது சரி. அந்த ஆதரவு தொலைந்து விட்டது என்று சாட்சி கூறுகின்றார். உண்மையில் என் மீது காவல் துறையினர் வழக்கு பதிவு செய்த விபரத்தை ஒப்புக்கொண்டே நான் அங்கிருந்து சென்று விட்டேன் என்றும், அதனால் தான் நான் காவல் நிலையத்திலும், உயர் அதிகாரிகளிடமும் புகார் கொடுத்ததாக கூறுவது பொறுத்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. விபத்து நடந்த பொழுது நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் என் பெயரில் இருந்தது. அந்த வண்டியின் திறன் 125 சிசி என்பது சரி. இந்த விபத்தில் சம்மந்தப்பட்ட மற்றொரு இருசக்கர வாகனத்தின் திறன் 100 சிசி என்பது சரி. 100 சிசி வண்டியை விட 125 சிசி வேகமாக செல்லலாம் என்பது சரி. விபத்து நடந்த பொழுது இருசக்கர வாகனத்தில் நானும், சசிகுமாரும், மற்றொருவரும் சென்றோம் என்றால் நானும், சசிகுமாரும் மட்டுமே சென்றோம். சம்பவம் அன்று சசிகுமாரின் அக்காவிற்கு திருமணம் என்பது சரி. அந்த திருமணத்தில் கலந்து கொண்ட நாங்கள் மதுஅருந்தி அப்பொழுது சென்று கொண்டிருந்தோம் என்றால் தவறு. உண்மையில் சம்பவத்தின் பொழுது நாங்கள் மதுஅருந்தி இருந்தோம் என்றும், அதனால் தான்

வண்டியை வேகமாக ஓட்டிச்சென்றோம் என்றும், அப்பொழுது எதிரே வந்த வாகனத்தின் மீது எங்கள் வண்டியை மோதி விட்டோம் என்றும் சொன்னால் தவறு. விபத்து ஏற்பட்ட பிறகு மருத்துவமனையில் என்னை யார் சேர்த்தார்கள் என்பது எனக்கு தெரியாது. விபத்தின் போது என்னுடன் சசிகுமாரை தவிர வேறு யாரும் வரவில்லை. விபத்தின் போது அந்த விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனங்களை தவிர மற்ற இருசக்கர வாகனங்களும் எனக்கு முன்பே சென்று கொண்டும், வந்து கொண்டும் இருந்தது. எதிரே இருசக்கர வாகனம் வருவதை நான் 10 அடி தூரத்தில் பார்த்தேன். சம்பவம் நடந்த ரோடு நேரான ரோடு என்பது சரி. நாங்கள் பொன்மலைப்பட்டியில் இருந்து ஜெயில்கார்னரில் உள்ள சசிகுமார் வீட்டிற்கு போய்க்கொண்டிருந்தோம். அந்த சாலை கிழமேல் சாலை என்பது சரி. நான் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தேன். அந்த ரோட்டின் அகலம் 20 அடி இருக்குமா என்றால் தெரியாது. அந்த ரோட்டில் சாலையின் இருபகுதியையும் பிரிக்கும் வகையில் மத்தியில் வெள்ளைக்கோடு எதுவும் இல்லை. எனக்கு அந்த ரோடு நன்கு தெரியும். அந்த ரோடு 20 அடி அகலம் உள்ள ஒரே நேரத்தில் இரு பேருந்துகள் செல்லக்கூடிய அளவில் அகலம் உள்ளது என்றும், நான் அதை வேண்டுமென்றே மறைக்கின்றேன் என்றும் சொன்னால் தவறு. விபத்து நடந்த பொழுது அந்த இடத்தில் சாலையில் விளக்கு வெளிச்சம் நன்கு இருந்தது என்றால் எனக்கு தெரியவில்லை. அங்கு ரோட்டின் இருபுறமும் காவலர் குடியிருப்பு உள்ளதா என்றால் சாலையின் வலது பக்கம் மட்டும் காவலர் குடியிருப்பு உள்ளது. சம்பவ இடத்திற்கு அருகில் வினாயகர் கோவில் இல்லை. 30 அடி தொலைவில் வினாயகர் கோவில் உள்ளது. சம்பவம் வினாயகர் கோவிலுக்கும் வடபுறத்தில் 6 அடி தூரத்தில் நடந்ததா என்றால் தவறு. நாங்கள் அப்பொழுது தார் ரோட்டில் தான் சென்று கொண்டிருந்தோம். சம்பவத்தின் பொழுது நாங்கள் மூன்று பேர் ஒரே வாகனத்தில் அதிவேகமாக சென்றோம் என்றும், அதனால் வாகனத்தை கன்ரோல் செய்யமுடியாமல் சாலையின் வலது பக்கம் சென்று எதிரே வந்த வாகனத்தின் மீது மோதி விட்டோம் என்றும் சொன்னால் தவறு. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் போலீசாரின் மாதிரிவரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளபடி சம்பவ இடத்தில் அமைப்புகள் உள்ளதா என்றால் இதைப்பார்த்து நான் சொல்ல இயலவில்லை. நான் சம்பவ இடம் குறித்து வரைபடம் தாக்கல் செய்யவில்லை. குற்றவியல் நீதிமன்றத்தில் முதல் தகவல் அறிக்கை மற்றும் காயச்சான்றுக்கு

நகல் கேட்டு நான் மனு தாக்கல் செய்தேன் என்பது சரி. அந்த நகல் மனு உடன் தாக்கல் செய்த அபிடவிட்டில் மாதிரி வரைபடத்திற்கும் நகல் கோரியிருந்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. சம்பவ வரைபடத்தின் நகல் பெற்றுள்ளேன் என்றும், அது எனக்கு பாதகமாக உள்ளதால் மறைக்கின்றேன் என்றும் சொன்னால் தவறு. எதிரே வந்த இருசக்கர வாகனம் சாலையில் முறையாக வந்து கொண்டிருந்தது என்றும், நாங்கள் தான் அதிவேகமாக ஓட்டிச்சென்று மறுபக்கம் சென்று அந்த வண்டியில் மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டோம் என்றும் சொன்னால் தவறு. சம்பவத்திற்கு பிறகு சுமார் 2 ½ மாதம் கழித்து முதல் தகவல் அறிக்கையை படித்து பார்த்தேன். அதை படித்து பார்க்கும் பொழுது என்னுடன் ஜெயராஜ் இல்லை. முதல் தகவல் அறிக்கையின் ஜெராக்ஸ் நகலை அப்பொழுது படித்து பார்த்தேன். அது எப்படி கிடைத்தது என்று என் அப்பாவிற்கு தான் தெரியும். என் அப்பாவை இந்த வழக்கில் விசாரிக்க முடியும் என்பது சரி. என் அப்பாவை நீதிமன்றத்திற்கு அழைத்து வர எனக்கு விருப்பம் இல்லை. முதல் தகவல் அறிக்கையை காவல் நிலையத்தில் படித்து பார்த்து விபரம் தெரிந்து கொண்ட பிறகே பிணையில் சென்றேன் என்றும், அதை மறைக்க தற்பொழுது என் அப்பாவை நீதிமன்றத்திற்கு அழைத்து வர விருப்பம் இல்லை என்றும் கூறுகின்றேன் என்றும் சொன்னால் தவறு. உயர் காவல் துறை அதிகாரிகளுக்கு நான் எப்பொழுது புகார் அனுப்பினேன் என்பது ஞாபகமில்லை. இந்த வழக்கை 1.9.2015 அன்று தாக்கல் செய்துள்ளேன் என்பது சரி. திருச்சி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மூன்று வழக்குகளின் விபரங்களை தெரிந்து கொண்டு அதை மறுக்கும் வகையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் தான் காலதாமதம் ஏற்பட்டது என்றால் தவறு. சசிகுமாருக்கு வழக்கில் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு அவர் இழப்பீட்டுத்தொகை பெற்று விட்டார் என்பது சரி. அந்த இழப்பீட்டை என் வாகனத்தை இன்சூரன்ஸ் செய்திருந்த நிறுவனம் தான் செலுத்தியது என்றால் அது எனக்கு தெரியாது. சசிகுமார் என் வாகனத்தை இன்சூரன்ஸ் செய்த நிறுவனத்திடம் இழப்பீடு தொகை பெற்ற விபரம் எனக்கு தெரியும் என்றும், அதனால் அங்கு வழக்கு தாக்கல் செய்தால் இழப்பீடு கிடைக்காது என்பதற்காக பெரம்பலூரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. 9.8.2014 ஆம் தேதியன்று காலையில் ஜெயராஜீடன் நான் காவல் நிலையத்தில் ஆஜராகி குற்றத்தை ஒப்புக்கொண்டேன் என்றால் தவறு. நான் தொடர் சிகிச்சை பெற்றதற்கு

ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. எனக்கு ரூ.3,00,000/— மருத்துவ செலவு ஏற்பட்டதாக கூறுவதை பொறுத்து தக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. நான் ஏஆர்என் மோட்டார்சில் பணிபுரிந்த பொழுது சம்பளம் பெறுவதற்கு கையெழுத்து இடுவேன் என்பது சரி. அந்த நிறுவனத்தில் சம்பவத்தின் பொழுது 8 பேர் பணிபுரிந்தார்கள். எனக்கு அந்த நிறுவனத்தில் சேமநலநிதி மற்றும் பென்ஷன் தொகைக்காக பிடித்தம் செய்தார்கள் என்றால் சேமநலநிதி மட்டும் பிடித்தம் செய்தார்கள். அதனுடைய எண் எனக்கு தெரியும். நான் சேமநலநிதி கோரி பெற்றுள்ளேன். இதைப்பொறுத்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்பது சரி. நான் அந்த நிறுவனத்தில் தற்காலிக பணியாளராகத்தான் இருந்தேன் என்றால் தவறு. எனக்கு மாதம் ரூ. 8,000/— சம்பளம் என்றும், ரூ.10,000/— போனஸ் என்றும், வழக்கிற்காக பொய்யாக கூறுகின்றேன் என்றால் தவறு. அந்த நிறுவனத்தில் உள்ளவர்களை விசாரித்தால் அந்த விபரம் தெரியவரும் என்றால் அந்த நிறுவனமே தற்பொழுது இல்லை. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றும், அவை முழுவதுமாக குணமாகி விட்டது என்றும், எனக்கு எந்த உபாதைகளும் இல்லை என்று சொன்னால் தவறு. நான் கோரியுள்ள நஷ்டஈடு அதிகம் என்றால் தவறு. விபத்திற்கு நான் தான் காரணம் என்றும், அதனால் 1—ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் சொன்னால் தவறு.

**குறுக்குவிசாரணை:— ( 2—ம் எதிர்மனுதாரர் தரப்பில் )**

2—ம் எதிர்மனுதாரர் தரப்பில் அவகாசம் வேண்டியதால் ஒத்திவைக்கப்படுகின்றது.

ஒம்/—அ.முரளீதரன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
பெரம்பலூர்.